بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 11/08/2023 அன்று U.K. - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்துடன் உள்ள இறை உதவிகள், அருள்கள் பற்றிய ஈமானுக்கு ஒளியூட்டும் சம்பவங்கள்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۞ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۞ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۞ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۞

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۞ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۞ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۞

அல்லாஹ்வின் வாக்குறுதிகேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை ஊழியருடைய ஜமாஅத்தின் மீது ஒவ்வொரு நாளும் அல்லாஹ்வின் அருள்களின் மழை பொழிகிறது. இதைக் குறித்து மாநாட்டின் அறிக்கையில் கூறப்படுகின்றது. அவை அனைத்தையும் குறுகிய நேரத்தில் எடுத்துரைப்பது சாத்தியமில்லை. அவற்றிலிருந்து சிலவற்றை இன்றும் நான் எடுத்துரைப்பேன்.

**கின்ஷாஸா**வுடைய லோக்கல் மிஷனரி ஹமீது சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்: **(Uvira)** உவீரா எனும் நகரில் நம்முடைய ரேடியோ நிகழ்ச்சியை கேட்டு லோக்கல் பள்ளிவாசல் இமாம் ஈஸா சாஹிப் (நம்மை) தொடர்பு கொண்டார்; மிஷன் ஹவுசுக்கு வந்தார். ஜமாஅத்தினுடைய தூதுச் செய்தியை புரிந்து கொண்டு பைஅத் செய்துவிட்டார். பிறகு, தன்னுடைய கிராமத்திற்கு சென்று அங்கு தப்லீ(க்)கும் செய்ய ஆரம்பித்து விட்டார். அவருடைய தப்லீ(க்)கின் விளைவால் 24 நபர்கள் அஹ்மதியத்தில் இணைந்து விட்டார்கள். அதன் பிறகு நம்முடைய தலைமையக முபல்லிக் சாஹிப் அவர்கள் அங்கு சுற்றுப்பயணம் செய்த போது இன்னும் 8 பேர் பைஅத் செய்தார்கள். இவ்வாறு அங்கு ஜமாஅத் ஏற்படுத்தப்பட்டு விட்டது.

**காங்கோ கின்ஷாஸா** உடைய மாநிலமான **(Mai-Ndombe)** மைன் தூம்பேவுடைய ஒரு கிராமத்தில் முஅல்லிம் உமர் முனவ்வர் சாஹிப் அவர்கள் தப்லீக்கிற்காக அனுப்பப்பட்டார்கள். அங்கு அவர் மக்களிடத்தில் பிரசுரங்களை விநியோகித்தார்கள். சில தீய இளைஞர்கள் கூச்சலிட ஆரம்பித்தார்கள்; கல்லெறிய ஆரம்பித்தார்கள்.

முஅல்லிம் சாஹிப் அந்த கற்களிலிருந்து தன்னை பாதுகாத்தவாறு அங்கு தப்லீக் செய்து கொண்டிருந்தார்கள். அங்கிருந்தவர்கள் அவருடைய பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையை கண்டு பெரும் தாக்கத்திற்கு உள்ளானார்கள். அங்கிருந்த பள்ளிவாசலுக்கு சென்று மக்களுடைய கேள்விகளுக்கு திருப்தியளிக்கும் வகையில் பதில் கொடுத்தார்கள். இவ்வாறு 40, 42 நபர்கள் இந்த தப்லீ(க்)கினால் தாக்கத்திற்குள்ளாகி பைஅத் செய்தார்கள். அங்கும் ஒரு புதிய ஜமாஅத் ஏற்படுத்தப்பட்டு விட்டது.

**கினி பசாவு**வைச் சார்ந்த இமாம் தமானே என்பவர் கூறுகிறார்: நீங்கள் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) மற்றும் திருக்குர்ஆன் ஹதீஸ் ஆகியவற்றை ஏற்றுக் கொள்வது கிடையாது என்றுதான் இன்று வரை நாங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத் பற்றி

கேள்விப்பட்டிருந்தோம். ஆனால் இன்று நாங்கள் மாநாட்டு நிகழ்ச்சிகளைக் கண்டுவிட்டோம். இன்று இந்த மாநாட்டின் அருளால் நாங்கள் உங்களுடைய கலீஃபாவை கண்டோம்; அவர்கள் கூறியதைக் கேட்டோம். அவர்களோ, அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தபா (ஸல்), திருக்குர்ஆன், ஹதீஸ் ஆகியவற்றை குறித்து அறிவுரை செய்தார்கள். ஜமாஅத்துக்கு எதிராக பொய் பிரச்சாரம் செய்யப்படுகிறது என்று இன்று எனக்கு உறுதியாக தெரிந்து விட்டது. எப்போதும் இறை ஜமாஅத்துகளுக்கு எதிராகத்தான் பொய் பிரச்சாரங்கள் செய்யப்படும். இன்று நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைகிறேன்.

**(Burundi) புரூண்டி**யின் ஒரு சிறு நகரில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பள்ளிவாசலை மூட வைக்க வேண்டும் என்பதற்காக சுன்னத் ஜமாஅத் பள்ளியின் இமாம் எல்லா வகையிலும் முயற்சி செய்தார். இதற்காக அவர் அரசாங்க அதிகாரிகளையும் சந்தித்தார். ஆனால் அவருடைய எந்த முயற்சியும் பயனளிக்கவில்லை. நம்முடைய முஅல்லிம் சாஹிப் அவர்களை அந்தப் பள்ளியின் இமாம் கேள்வி பதிலுக்காக அழைத்தார். கேள்வி பதிலில் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணம் குறித்த விவாதம் ஆரம்பித்தது. முஅல்லிம் சாஹிப் அவர்கள், ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் மரணம் குறித்து திருக்குர்ஆனுடைய சான்றுகள் மூலமாக நிரூபித்தபோது அந்த பெயர்தாங்கி ஆலிமால் பதில் கூற முடியாமல் போகவே அதற்கு பகரமாக முஅல்லிம் சாஹிபிடம் சண்டையிட ஆரம்பித்தார். ஜமாஅத்தின் மீது குஃப்ர் ஃபத்வா கொடுத்தார். இதைக் கண்ட ஒரு கிறிஸ்தவர் எழுந்து நின்று, அஹ்மதிய்யா ஜமாஅத் முஸ்லிம் ஆகும். உங்களுடைய இஸ்லாத்தைத்தான் புரிந்து கொள்ள முடியவில்லை! இவர்கள் கூறுவது புரிகிறது என்று தெளிவாக கூறிவிட்டார்.

இன்னொரு புறம், அந்த பள்ளிவாசலில் மௌலவிகளுக்கு இடையே சண்டை ஏற்பட்டது. இதன் காரணமாக அரசாங்கம் தலையிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவர்களுடைய பள்ளிவாசலை மூன்று மாதத்திற்காக அரசாங்கம் மூடிவிட்டது.

இப்போது இந்த வழிமுறையை பாகிஸ்தானைப் போன்று இந்த பெயர் தாங்கிய ஆலிம்கள் மேற்கொள்கிறார்கள். எல்லா இடத்திலும் அஹ்மதிகளின் பள்ளிவாசல்களை மூட வைக்க வேண்டும் என்று முயற்சி செய்கின்றனர். மினாராக்களையும், மிஹ்ராபுகளையும் உடைக்க வேண்டும் என்று நினைக்கின்றனர். அஹ்மதிகளுக்கு மினாராக்கள் கட்டுவதற்கு அனுமதி இல்லை என்று பாகிஸ்தானின் சட்டத்தில் எங்கும் எழுதப்படவில்லை! ஆனால் அரசாங்கம் இந்த மௌலிவிகளுக்கு முன்னாலும், பெயர் தாங்கிய ஆலிம்களுக்கு முன்னாலும் மண்டியிட நிர்பந்தத்திற்கு ஆளாகி இருக்கின்றது.

இந்த மவ்லவிகள் எவ்வகையிலாவது நஷ்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்று முழுமையாக முயற்சி செய்கிறார்கள். ஆனால், இன்ஷா அல்லாஹ்! ஒரு நாள் இவர்களே அழிந்து போவார்கள்.

பாகிஸ்தானில் திருக்குர்ஆனை அச்சடிப்பதற்கு நமக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. மொழியாக்கத்தை பொறுத்தவரை அந்த பேச்சுக்கே இடம் இல்லை! மொழியாக்கம் இல்லாத சாதாரண திருக்குர்ஆனை வெளியிடுவது மன்னிக்க முடியாத குற்றமாக ஆக்கப்பட்டுள்ளது. எந்த அளவுக்கு என்றால் திருக்குர்ஆன் ஓதுவதை ஏன் கேட்டீர்கள்; **recording** ஐ ஏன் கேட்டீர்கள் என்று சிலர் மீது கடுமை காட்டப்பட்டுள்ளது; இவ்வாறு வழக்கு பதியப்பட்டுள்ளது. இப்போது இது பெயர் தாங்கிய முஸ்லிம்களுடைய இஸ்லாமாக உள்ளது.

ஆனால், இதற்கு நேர் எதிராக அல்லாஹ் நமக்காக எவ்வாறான வழிகளை திறக்கிறான் எனப் பாருங்கள்!

**தன்சானியா**வுடைய முஅல்லிம் சாஹிப் கூறுகிறார்: "ஒருநாள் 30 கிலோமீட்டர் தொலைவிலிருந்து ஜமாஅத் அல்லாத ஒருவருடைய போன் வந்தது. அவர் திருக்குர்ஆனுடைய (Swahili) ஸ்வாஹிலி மொழியாக்கத்தை வாங்க விரும்பினார். திருக்குர்ஆனுடைய மொழியாக்கம் உங்களுக்கருகில் இருக்கக்கூடிய பகுதிகளிலிருந்தும் கிடைக்கிறதே என முஅல்லிம் சாஹிப் அவர்கள் கேட்டபோது அந்த நபர் கூறினார்: எனக்கு ஜமாஅத்தினுடைய மொழியாக்க நடையும், விளக்க உரை நடையும் மிகவும் பிடித்துள்ளது. மற்றவர்களும் மொழியாக்கம் செய்திருக்கிறார்கள்தான்! ஆனால் ஜமாஅத் உடைய மொழியாக்க நடை எனக்கு பிடித்துள்ளது. ஏனென்றால் அறிவு அதை ஏற்றுக் கொள்கிறது. இந்த மொழியாக்கத்தைதான் நான் வாங்க விரும்புகிறேன் என்று அவர் கூறினார்."

மேற்கத்திய உலகில் ஸ்வீடன், டென்மார்க் போன்ற நாடுகளில் திருக்குர்ஆன் அவமதிக்கப்படுகின்றது. அங்கு இஸ்லாத்தின் அழகிய போதனை எடுத்து வைக்கப்படும் போது அந்த எதிர்ப்பாளர்களின் மனநிலை மாறி விடுகின்றது. எனவே இன்று அஹ்மதிய்யா ஜமாஅத்துதான் திருக்குர்ஆனுடைய தகுதி மற்றும் அந்தஸ்தை உயர்த்துவதற்காகவும், அதனுடைய உண்மையான போதனை கூறுவதற்கும் முயற்சி செய்கின்றது.

**திருக்குர்ஆனை பரப்புவதாலும், இஸ்லாமிய போதனைகளின் இலக்கியங்களை பரப்புவதாலும் மக்களின் மீது எவ்வாறு தாக்கம் ஏற்படுத்துகிறது என்பதை குறித்து ஒரு சம்பவத்தை நான் எடுத்துக் கூறுகின்றேன்.**

(Golaghat) **கோலாகாட் book fair** -ன் போது ஷபானா யாஸ்மின் என்ற ஓர் இஸ்லாமிய பேராசிரியர் வந்தார். அவர் நமது ஸ்டாலை பார்த்தபோது மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். நேரே வந்து திருக்குர்ஆனுடைய அஸ்ஸாமி மொழியாக்கத்தை எடுத்துக் கொண்டார்.

அஸ்ஸாம் மாநிலத்தில் இந்த கண்காட்சி நடந்து கொண்டிருந்தது.

தன்னுடன் வந்திருந்த இன்னொரு பேராசியரிடம், இன்று எனது கனவு நிறைவேறிவிட்டது. நான் வெகு காலமாக திருக்குர்ஆனின் அஸ்ஸாமிய மொழியாக்கத்தை தேடிக் கொண்டிருந்தேன். என்னுடைய ஆசிரியர் ஒருவர் என்னிடம் பலமுறை திருக்குர்ஆனுடைய அஸ்ஸாமிய மொழியாக்கத்தை கேட்டார். ஆனால் என்னிடம் மொழியாக்கம் இல்லாத காரணத்தினால் என்னால் அவருக்கு கொடுக்க முடியவில்லை. அதன் காரணமாக எனக்கு கடும் வருத்தம் இருந்தது. முஸ்லிமாக இருப்பதை நினைத்து நான் வருத்தப்பட்டேன். என்னுடைய ஆசிரியர் இறந்து போன பிறகு இன்று எனக்கு இந்த திருக்குர்ஆன் கிடைத்துள்ளது. இதன் விலை ஆயிரக்கணக்கான ரூபாய்களாக இருந்திருந்தாலும்கூட அப்போது இது கிடைத்திருந்தால் நான் வாங்கி இருப்பேன் என்று அவர் கூறினார்.

(Dhemaji) **தேமாஜி** புக் **fair** -ல் பான்தி தோபாராஸ் எனும் ஓர் இந்து பெண்மணி வந்தார். இவர் **lord** ஷிவா உடைய கோவிலை கட்டிக் கொண்டிருக்கிறார். அது குறித்து இவர் தப்லீக் செய்கிறார். இவர் நமது புக் ஸ்டாலை பார்த்தபோது, இந்தப் பகுதியில் முஸ்லிம்களுடைய எண்ணிக்கை மிக குறைவுதான்! இங்கு ஓர் இஸ்லாமிய ஸ்டால் உள்ளதே என்று வியப்படைந்து நமது ஸ்டாலுக்கு வந்து பேசினார். அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்து சென்றார். அடுத்த நாள் அவர் மீண்டும் வந்தார். ஸ்டாலிலிருந்த அனைவருக்கும் பழங்களை கொண்டு வந்து கொடுத்தார். மேலும், திருக்குர்ஆனை பார்த்து மிக மகிழ்ச்சி அடைந்தார். திருக்குர்ஆனை வாங்கும்போது, இன்று என் வாழ்வினுடைய ஒரு கனவை நீங்கள் நிறைவேற்றி விட்டீர்கள் என்றும் கூறினார்.

திருக்குர்ஆன் இறுதி ஷரீஅத்தாகும். நான் ஏற்கனவே கூறியது போன்று, அதை ஓதுவது; ஓதக் கேட்பது ஆகியவை பாகிஸ்தானில் அஹ்மதிகளின் மீது தடை செய்யப்பட்டுள்ளது; மிகப்பெரும் குற்றமாக கருதப்படுகிறது. அதே வேதத்தின் மூலமாகத்தான் அஹ்மதிய்யா ஜமாஅத் உலகில் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை கொண்டு சேர்க்கின்றது; உலகை சீர்திருத்துகின்றது.

(Micronesia) **மைக்ரோநேசியா**வின் முபல்லிக் ஷர்ஜீல் சாஹிப் கூறுகிறார்கள்: கொஞ்ச காலத்திற்கு முன்பு சைமன் ஃகிடன் என்ற ஒருவர் தொடர்பு கொண்டு திருக்குர்ஆன் பிரதி ஒன்றை வாங்கிச் சென்றார். சிறிது காலம் கடந்த பிறகு ஒரு நாள் திடீரென்று அவரிடமிருந்து, சந்திக்க விரும்புவதாக மெசேஜ் வந்தது. அவர் பள்ளிவாசலுக்கு வந்து கூறினார்: ''நான் எனது முழு வாழ்நாளிலும் மிக விளக்கமாக பைபிளை படித்திருக்கிறேன். ஆனால் முயற்சி செய்த பிறகும் கூட அதனுடைய போதனை உள்ளத்தில் அமரவில்லை. ஒன்றுமே புரிய முடியவில்லை. ஆனால் எப்போதிருந்து திருக்குர்ஆனை படிக்க ஆரம்பித்தேனோ அதனுடைய ஒவ்வொரு சொல்லும் உள்ளத்தில் நேரடியாக இறங்குவது போல் இருந்தது.''

தம் வாழ்க்கை முழுவதும் தவறில் இருந்திருக்கிறேனா என்றும், திருக்குர்ஆனுடைய போதனையை விட்டு விலகி இருந்திருக்கிறேனா என்றும் அவருக்கு வியப்பு ஏற்பட்டது. இப்போது அவர் ஜமாஅத்தில் இணைந்தது மட்டுமின்றி பெரும் துணிவுடன் இஸ்லாத்தைப் பற்றி தப்லீக் செய்கிறார்.

**புர்கினோ ஃபாசோ,** மஹ்தி ஆபாதைச் சார்ந்த சயீது வஜீகா சாஹிப் என்பவர் கூறுகிறார்: ''எங்களுடைய கிராமத்தில் பெரும்பாலான மக்கள் அஹ்மதியத்தை ஏற்றுக்கொண்டு விட்டனர். சவூதி அரேபியாவில் இருக்கும் எனது ஒரு (cousin) கஸின் தம் சார்பாக செலவு செய்து எங்களை சவூதி அரேபியாவுக்கு வரவழைத்தார். அங்கு சென்றடைந்த போது எங்களை கஅபத்துல்லாஹ்வுக்கு அழைத்துச் சென்றார். இவை இஸ்லாத்தின் புனித இடங்களாகும். இஸ்லாம் இங்கிருந்துதான் ஆரம்பமானது; பாகிஸ்தானில் இருந்த அல்ல! ஆகவே இங்கு இருக்கின்ற வஹாபி கொள்கையை மேற்கொள்ளுங்கள். அஹ்மதியத்தை விட்டு விடுங்கள் என்று கூறினார். அதற்கு நான் அவரிடம், இதற்காகவா நீங்கள் எங்களை வரவழைத்தீர்கள் என்று கேட்டதற்கு, அவர் ஆமாம் என்று தலையசைத்தார். நான் அவரிடம் கூறினேன்: இந்த புனித இடத்தின் நிழலில் நின்று கொண்டு, இறைவா! என்னுடைய வாழ்வில் நான் அஹ்மதிய்யத்தை விடக்கூடிய எந்த ஒரு நிலையும் வந்து விடக்கூடாது. அதற்கு முந்தைய ஈமானிய நிலையிலேயே நீ எனக்கு மரணத்தை தந்து விடுவாயாக! நான் எனது ஈமானை விட்டு திரும்பி விடக்கூடிய சந்தர்ப்பமே எனக்கு வரக்கூடாது என்று நான் துஆ செய்யப்போகிறேன் என்று கூறி அவ்வாறு துஆவும் செய்தேன்.

அவர் கூறுகிறார்: எவ்வாறிருப்பினும், அதற்குப் பிறகு வெகு விரைவில் புர்கினோ ஃபாசோ வந்து விட்டேன்.''

இறைவனுடைய நடைமுறை எவ்வாறு செயல்பட்டது என்றால், அவருடைய உறவினராக இருந்த அந்த cousin புர்கினோ பாஸோவுக்கு வந்தார். அவருக்கு அல்ஹாஜ் இப்ராஹிம் சாஹிப் அவர்கள் தப்லீக் செய்தார்கள். அதன் காரணமாக அவர் அஹ்மதியாக ஆகிவிட்டார்.

**நைஜீரியா** உடைய ஒரு கிராமத்தில் வசிக்கக் கூடிய ஒருவருக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளக் கூடிய நல்வாய்ப்பு கிடைத்தது. அஹ்மதியத்தை ஏற்றுக் கொள்வதற்கு முன்பு அந்த கிராமத்தில் ஜமாஅத்திற்கு எதிராக இருக்கக்கூடிய குழுவில் மும்முரமாக செயல்படக் கூடிய உறுப்பினராக இருந்தார். பைஅத்திற்கு பிறகு கிராமவாசிகள் சார்பாக கடுமையான எதிர்ப்பை எதிர்கொள்ள நேர்ந்தது.

அவர் கூறுகிறார்: “ஒரு நாள் நான் நிலத்தில் வேலை செய்து கொண்டிருக்கும் போது கடுமையான புயல் வீசியது. நான் திரும்ப எனது வீட்டிற்கு சென்றால் அங்கு எனது வீடு புயலால் அழிந்து போயிருக்கும் என்று உறுதியாக நம்பினேன். அப்போது எதிரிகள் கூறிய ஒரு விஷயமும் சிந்தனையில் வந்து சென்றது. அது என்னவென்றால், நீர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டுள்ளீர். ஆகவே ஒருநாள் நீர் உமது வீட்டிற்கு திரும்பும் போது உமது வீடு அழிந்திருக்க காண்பீர் என்று அவர்கள் கூறிய விஷயம். (அப்போது) நான், அல்லாஹ்வே! இந்த ஜமாஅத் உன்னுடைய ஜமாஅத் என்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் நற்செய்தி கூறப்பட்ட அதே வாக்களிக்கப்பட்ட மஸீஹ் என்றால், மஹ்தி என்றால் நீ எனது வீட்டை விழச்செய்யாமல் இருப்பாயாக என்று துஆ செய்திருந்தேன்.

எவ்வாறிருப்பினும், மழை நின்ற பிறகு நான் எனது வீட்டுக்குள் சென்றேன். அதில் ஒவ்வோர் அறையும் பாதுகாப்பாக இருப்பதைக் கண்டேன். எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. ஆனால் சுற்றி இருந்த பல வீடுகள் அழிந்து போயிருந்தன.

இந்த சம்பவத்திற்கு பிறகு அஹ்மதிய்யத் உண்மை என்பதில் எனது ஈமான் இன்னும் உறுதியாகிவிட்டது. இந்த ஜமாஅத் உண்மையிலேயே இறை ஜமாஅத் ஆகும் என்று எனக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டது.”

உலகின் பல்வேறு நாடுகளில் அல்லாஹ்வின் இந்த நடைமுறையை நாம் காண்கிறோம். அதாவது, அல்லாஹ்வின் உதவிகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இருக்கக்கூடிய இந்த காட்சிகள் நமக்கு தென்படுகின்றன. அன்னார் நமக்கு உண்மையான இஸ்லாத்தின் போதனையை வழங்கினார்கள். இந்த சம்பவங்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உண்மைக்கு மிகப்பெரும் சான்றாக இருக்கிறன. அல்லாஹ்வின் அருளால் இவ்விஷயங்கள் மக்களுடைய ஈமானை உறுதிப்படுத்துகின்றன. அல்லாஹ், உலகின் கண்ணையும் திறப்பானாக! ஈமானையும், உறுதிப்பாட்டையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நல்வாய்ப்பை அவர்களுக்கு வழங்குவானாக!

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் 4 மர்ஹூம்களைப் பற்றிய நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள். ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அவர்களின் ஜனாஸா ஃகாயிப் தொழ வைக்கப்படும் என்று அறிவித்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ
اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ
اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ
وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**